**சனமழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 11.10.2018

# நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாசி மாதம் 17ஆம் நாள் 11**.10.2018** **வியாழக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

அரசாணை எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.07.2018 மற்றும் அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.07.2018ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4-ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தேனி அல்லிநகரம் நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர் குடியிருப்போர் / குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்துவரி சுயமதிப்பீடு விவர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 637 நாள்.06.09.2018 ன் படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு விவரங்கள் தேனி - அல்லிநகரம் நகராட்சி இணையதள முகவரி (http:/123.63.242.116/theni) மற்றும் தேனி - அல்லிநகரம் அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்விவரங்கள் நேரடியாக மேற்படி இணையதளத்தின் வாயிலாகவும், அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

| வ.எண் | 01.04.2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டலங்கள் / அடிப்படை மதிப்பு விபரம் | | 01.04.2018 முதல் நடைமுறை படுத்தப்படவுள்ள மண்டலங்கள் / அடிப்படை மதிப்பு விபரம் | |
|---|---|---|---|---|
| | மண்டலம் | அடிப்படை மதிப்பு | மண்டலம் | அடிப்படை மதிப்பு |
| 1 | A | 1.25 | A | 1.50 |
| 2 | B | 0.85 | B | 1.10 |
| 3 | C | 0.65 | C | 0.85 |

மேற்படி அரசு ஆணைகளின்படியும் நகர்மன்ற தீர்மானத்தின்படியும் 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்வதற்கும் சதுரஅடிக்கான மேற்காணும் விபரப்படி அடிப்படை மதிப்பினை (Zonal Value) உயர்த்தப்பட்டதற்கும் A, B மற்றும் C என தெருக்களை மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்ட விபரங்களுக்கும் பொது மக்களின் ஆட்சேபனை ஏதும் இருப்பின் எழுத்து மூலம் 30 தினங்களுக்குள் அலுவலகத்தில் தெரிவிக்க 11.09.2018ம் தேதி தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டு 30 தினங்கள் 11.10.2018 ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

மேற்படி அரசு ஆணைகளின் படி 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு குறித்து முடிவு செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

1. அரசு ஆணைகளின்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படியும் 01.04.2018ம் தேதி சொத்துவரி பொது சீராய்வு செய்திடவும் நகர்மன்ற தீர்மான எண் 637 நாள். 06.09.2018ல் நிர்ணயித்து உயர்த்தப்பட்ட A, B மற்றும் C மண்டல அடிப்படை மதிப்பினையும் மற்றும் A, B மற்றும் C என பிரிக்கப்பட்ட மண்டல தெருக்களையும் ஊர்ஜிதம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்திட நகராட்சியின் நிதிநிலையினை மேம்படுத்துவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க.எண். 2567/2018/அ1)

**<u>தீர்மான எண். 704 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 02</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்த நிலையத்தில் உள்ள சுற்றுலா வாகன அலுவலகத்திற்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்த புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சுற்றுலா வாகன அலுவலகத்திற்கு மாத வாடகை தொகை ரூ.5000/- லிருந்து கூடுதலாக 15% உயர்வு செய்து ரூ.5750/- என நிர்ணயம் செய்த அனுமதி வழங்க (வ.விதிப்பு எண்.120/2015012) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3150/2015/அ3)

**<u>தீர்மான எண். 705 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 22.23 சதுர கி.மீ பரப்பளவில் 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட தலைநகராமாகவும் உள்ளது. இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 33 வார்டுகளில் சுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு போதுமான எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்கள் 2018 - 19-ம் நிதியாண்டில் குறைவாக இருந்ததால் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித எண். 4604 / P3 / 2018, நாள். 15.02.2018–ன்படி

100 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பணியாளர்கள் பெற்று துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி ஏற்கனவே உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களுடன், 100 தனியார் துப்புரவு பணியாளர் கொண்டு இதுநாள் வரை இந்நகர் பகுதியில் சுகாதாரப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகரின் புறவழிச்சாலையில் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் கட்டப்பட்டு A கிரேடு தகுதியுடன் 30.12.2013-ம் தேதி முதல் மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்ற நிலையில் இந்நகராட்சியில் அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கைக்கும் குறைவாக இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>இந்நகராட்சியில் 2018 – 19 -ம் ஆண்டில் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை விபரம் :-</u>**

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பபின் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | 335 நபர்கள் |
| 2 | அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 215 நபர்கள் |
| 3 | தற்போது உள்ள நிரந்தமான மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 106 நபர்கள் |
| 4 | தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 100 நபர்கள் |
| 5 | தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர் மற்றும் தனியார் துப்புரவு பணியாளர்களை அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி ஒப்பிடுகையில் பற்றாக்குறையாக உள்ள துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | 129 நபர்கள் |
| 6 | தற்போது நிர்வாக நிதிநிலையினை கருத்தில் கொண்டு கூடுதலாக தேவைப்படும் தனியார் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 100 நபர்கள் |

எனவே மேற்கண்ட அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி 335 துப்புரவு பணியாளர்கள் இருந்தால் இந்நகர்பகுதியில் 100% சுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு மிகவும் எளிதாக இருக்கும். ஆனால் மேற்படி அரசாணையின் படி 129 பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்தல் பணியினை 100% முழுமையாக செய்வதற்கு தற்போது உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் தனியார் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையினை சேர்த்து அரசாணை எண். 101 நாள், 30.04.1997–ன்படி ஒப்பீடுகையில்

பற்றாக்குறையாக உள்ள துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கையான 129 நபர்களில், நிர்வாக நிதிநிலையினை கருத்தில் கொண்டு 100 பணியாளர்களை மட்டும் தனியார் மயம் மூலம் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இப்பணியாளர்களுக்கான ஊதியத்தொகையினை மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி விலை நிர்ணயத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு தயார் செய்து அனுப்பப்பட்டு, அனுமதி பெற்ற பின்னர் இந்நகராட்சியில் இன்னும் கூடுதலாக 100 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு பொதுசுகாதாரப்பணி நடவடிக்கை மேற்கெள்ளளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது,

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6017/2018/எச்1)

**<u>தீர்மான எண். 706 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிழல்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | Accord advertising agencies, சென்னை (Deccan Chronicle மற்றும் மக்கள் குரல்) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை. வெளியீட்டு ஆணை எண்: 3519/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 04-09-2018. | பட்டியல் எண்: AAA/0557/18-19 நாள்: 08-09-2018 | ரூ: 68,947/- |
| 2 | Accord advertising agencies, சென்னை (The New Indian Express மற்றும் நமது புரட்சித் தலைவி அம்மா) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை. வெளியீட்டு ஆணை எண்: 3522/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 04-09-2018. | பட்டியல் எண்: AAA/0554/18-19 நாள்: 08-09-2018 | ரூ: 2,50,690/- |
| | | | மொத்தம் | **ரூ: 3,19,637/-** |

மேற்கண்ட தொகை ரூ:3,19,637/- (ரூபாய்: மூன்று லட்சத்து பத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று முப்பத்து ஏழு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.163 /2018 /இ1)**

**<u>தீர்மான எண். 707 அ, மற்றும் ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 05:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) கடை எண்.21 நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | எஸ்.நடராஜன்,<br>த/பெ.சினித்தேவர்,<br>வள்ளுவர் காலனி, தேனி. | ரூ.3625/- | -- |
| 2. | உ.விஜயக்குமார்,<br>த/பெ.உத்தமன்,<br>விஸ்வநாததாஸ் காலனி, தேனி. | ரூ.2350/- | -- |

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட கடைக்கு கடந்த ½ வருடங்களுக்கு மேலான கடை காலியாக இருப்பதாலும், 17 முறைக்கு மேல் ஏலம் கோரியும் யாரும் ஏலம் கோரமுன் வராததால் அருகில் உள்ள கடை எண்.21-க்கு தற்போது மாத வாடகை தொகை ரூ.3625/-க்கு கோரப்பட்டு அனுமதிக்கப் பட்டுள்ளதால் நகராட்சி நிதியினை கருத்தில் கொண்டு திரு.எஸ்.நடராஜன் என்பவர்க்கு மாத வாடகை ரூ.3625/- என ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 708 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) கடை எண்.29 நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | எஸ்.நடராஜன்,<br>த/பெ.சினித்தேவர்,<br>வள்ளுவர் காலனி, தேனி. | ரூ.2350/- | -- |
| 2. | உ.விஜயக்குமார்,<br>த/பெ.உத்தமன்,<br>விஸ்வநாததாஸ் காலனி, தேனி. | ரூ.3650/- | -- |

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட கடைக்கு கடந்த ½ வருடங்களுக்கு மேலான கடை காலியாக இருப்பதாலும், 17 முறைக்கு மேல் ஏலம் கோரியும் யாரும் ஏலம் கோரமுன் வராததால் அருகில் உள்ள கடை எண்.21-க்கு தற்போது மாத வாடகை தொகை ரூ.3625/-க்கு கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிதியினை கருத்தில் கொண்டு திரு.எஸ்.நடராஜன் என்பவர்க்கு மாத வாடகை ரூ.3625/- என ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 709 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 07</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) கடை எண்.37 நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | எஸ்.நடராஜன்,<br>த/பெ.சினித்தேவர்,<br>வள்ளுவர் காலனி, தேனி. | ரூ.2350/- | -- |
| 2. | உ.விஜயக்குமார்,<br>த/பெ.உத்தமன்,<br>விஸ்வநாததாஸ் காலனி, தேனி. | ரூ.2400 /- | -- |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே மாத வாடகை ரூ.8700/- என விடப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொகைகுறைவாக உள்ளதால் இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளது. மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 710 மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) கடை எண்.66 நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.முகமதுஇஸ்மாயில்,<br>த/பெ.மு.கனவாபிர்,<br>பங்களாமேடு, தேனி. | ரூ.4000/- | -- |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மேற்கண்ட கடைக்கு வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி பழைய வாடகை தொகையைவிட குறைவாக உள்ளதால் மறு ஏலம் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 711 மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 09:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனையம் கடை எண்.19எ நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்த கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.எஸ்.நிரஞ்சனா,<br>க/பெ.சரவணபிரேம்,<br>8,ஜெய்ராம்நகர், தேனி. | ரூ.3200/- | -- |

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே இருந்த மாத வாடகையை விட ரூ.3200/- குறைவாக உள்ளதால் மறு ஏலம்கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 712 மறு ஏலம் கோர அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 10:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் (கர்னல் ஜான் பென்னிகுவிக்) கடை எண்.20 நாள் 28.09.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | எஸ்.நடராஜன்,<br>த/பெ.சினித்தேவர்,<br>வள்ளுவர் காலனி, தேனி. | ரூ.2350/- | -- |
| 2. | உ.விஜயக்குமார்,<br>த/பெ.உத்தமன்,<br>விஸ்வநாததாஸ் காலனி, தேனி. | ரூ.3600 /- | -- |

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட கடைக்கு கடந்த ½ வருடங்களுக்கு மேலான கடை காலியாக இருப்பதாலும், 17 முறைக்கு மேல் ஏலம் கோரியும் யாரும் ஏலம் கோரமுன் வராததால் அருகில் உள்ள கடை எண்.20-க்கு தற்போது மாத வாடகை தொகை ரூ.3500/-க்கு கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிதியினை கருத்தில் கொண்டு திரு.எஸ்.நடராஜன் என்பவர்க்கு மாத வாடகை ரூ.3600/- என ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 713 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 11</u>:

தேனி – அல்லிநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் , மற்றும் தகுதிவாய்ந்த அலுவலகப்பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு 2018-19-ம் ஆண்டிற்கு தேவையான சீருடைகள் மற்றும் தையற்கூலி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை ( நிலை ) எண்.168, நாள் 16.11.2015–ன்படி 1 ஜோடி சீருடைக்கு ரூ.400/- வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.800/- துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கிடவும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480 / ஜெ3 / 2015, நாள்.13.06.2016–ல் தெரிவித்துள்ளபடி Tamilnadu Textile Corpaoration Ltd, Coimbatore – 18 நிறுவனத்திடம் மாதிரி மற்றும் விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.325000/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிந்து மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்காலம். **(ந.க.எண்.3589/2016/எச்1)**

**<u>தீர்மான எண். 714 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 12</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மனைகளுக்கு கட்டிட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் விண்ணபத்திற்கு கூர்ந்தாய்வுக்கட்டணம் தமிழ்நாடு முழுவதும் ஒரே கட்டணம் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.22860/2018/டிபி3 நாள் 25.09.2018-ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கட்டணத்தை 15.10.2018 முதல் ரூ.500/- என நிர்ணயம் செய்து வசூல் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1679/2018/எப்1)

**<u>தீர்மான எண். 715 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 13</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சிப்பகுதியில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான தகுதிவாய்ந்த பணியாட்கள் சப்ளை செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.20 (ரூபாய் ஆறுலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.702 நாள் 03.10.2018-ல் மேற்படி பணிக்கு 28.09.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வயர்மேன் ஒருநபர் / ஒரு மாதம் | ஹெல்பர் ஒரு நபர் / ஒரு மாதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பி.முருகேசன் | 10,110.00 | 7,100.00 |
| 2 | M/S.KAR, Construction, Theni | 10,500.00 | 7,200.00 |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.பி.முருகேசன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தெருவிளக்கு பராமரிப்பு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2908/2018/இ2)

**தீர்மான எண். 716 அ மற்றும் ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனைய வைரம் லாட்ஜ் அருகில் நகராட்சிக்கு சொந்தமான 5 x 8 ½ அடி காலியிடமும் அதே இடத்தில் உள்ள இரண்டு டீக் கடைகளுக்கும் தரை வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்களை பொது ஏலத்திற்கு விட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2806/2018/அ3)

**தீர்மான எண். 717 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:2.00 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலைய அணுகு சாலை, பேருந்து நிலைய வளாகம் மற்றும் வார்டு எண்:23, 29, 30, 31 மற்றும் 32 ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள LED விளக்குகள் மற்றும் கேபிள்கள் பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 20-09-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.P.முருகேசன் | ரூ:1,73,050.00 | ரூ:1,72,970.00 | 0.05% குறைவு |
| 2 | திரு.M.தமிழ்செழியன் | | ரூ:1,77,300.00 | 2.46% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.முருகேசன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தெருவிளக்குகளை உடனடியாக சீரமைக்க வேண்டியதன் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2850/2018/இ1)

**<u>தீர்மான எண். 718 அ மற்றும் ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:1.20 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 12 காந்தி நகரில் உள்ள குறிஞ்சி நகர் பிரதான சாலையில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் பணிக்கு 05-10-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.M.முகமது சலீம் | ரூ:1,02,896.16 | ரூ:1,09,742.99 | 6.65% கூடுதல் |
| 2 | திரு.P.மாயாண்டி | | ரூ:1,02,358.86 | 0.17% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.மாயாண்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2850/2018/இ1)

**<u>தீர்மான எண். 719 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 17:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:1.75 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிக்கு JCB வாகனம் மற்றும் டிராக்டர் வாகனம் வழங்குதல் பணிக்கு 05-10-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஓப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.T.தவமணி | ரூ:1,52,500.00 | ரூ:1,52,125.00 | 0.24% குறைவு |
| 2 | திரு.S.மாணிக்கம் | | ரூ:1,53,800.00 | 3.80% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திருமதி.T.தவமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2846/2018/இ1)

**தீர்மான எண். 720 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:30,000/- (ரூபாய்: முப்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் வார்டு எண்:01 கிருஷ்ணன் கோயில் தெருவில் உள்ள நகராட்சி பொது நூலக கட்டடத்தினை பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 05-10-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஓப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.M.முகமது சலீம் | ரூ:25,624.16 | ரூ:25,548.01 | 0.29% குறைவு |
| 2 | திரு.P.மாயாண்டி | | ரூ:26,881.16 | 4.90% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.M.முகமது சலீம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2848/2018/இ1)

**தீர்மான எண். 721 அ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 19</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:5.75 லட்சம் (ரூபாய்: ஐந்து லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 27 பாரஸ்ட் சாலை 4, 5 மற்றும் 6வது குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் பணிக்கு 05-10-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.M.முகமது சலீம் | ரூ:5,00,611.51 | ரூ:5,24,025.00 | 4.67% கூடுதல் |
| 2 | திரு.P.மாயாண்டி | | ரூ:4,99,740.00 | 0.17% குறைவு |

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.மாயாண்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2847 / 2018/ இ1)

**<u>தீர்மான எண். 722 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 20</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.12 பாத்திமா தியேட்டர் தெரு மற்றும் குறிஞ்சி நகர் 5-வது தெருவில் உள்ள மின் பவர் பம்பிலிருந்து அருகில் உள்ள தெரு பகுதிகளுக்கு பைப் லையன் பதித்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.95.00 (ரூ.தொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.664 நாள் 06.09.2018-ல் மேற்படி பணிக்கு 20.09.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பி.முருகேசன் | 80,228.00 | 0.02% குறைவு |
| 2 | திரு.எம்.தழ்செழியன் | 80,945.00 | 0.81% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.பி.முருகேசன் 0.02% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3030/2018/இ2)

**தீர்மான எண். 723 அ , ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:5.55 லட்சம் (ரூபாய்: ஐந்து லட்சத்து ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக பதிவறையில் Steel Rack அமைக்கும் பணிக்கு 05-10-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.T.தவமணி | ரூ:4,85,808.06 | ரூ:4,85,110.06 | 0.14% குறைவு |
| 2 | திரு.S.மாணிக்கம் | | ரூ:5,23,500.07 | 7.75% கூடுதல் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திருமதி.T.தவமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2849/2018/இ1)

**தீர்மான எண். 724 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:1.05 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 31 எண்ணம் குளிர்சாதனபெட்டி வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 14-09-2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) |
|---|---|---|
| 1 | R.A.Jeyasudarssan & Co, Theni. | ரூ:1,00,790.00 |
| 2 | Cool Tech Airconditioner, Theni | ரூ:1,06,370.00 |
| 3 | Bombay Traders, Theni. | ரூ:1,09,910.00 |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள M/s.R.A.Jeyasudarssan & Co, Theni நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2907 /2018 /இ1)

**தீர்மான எண். 725 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 23:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:75,000/- லட்சம் (ரூபாய்: எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்இயற்றி பழுது மற்றும் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு 14-09-2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) |
|---|---|---|
| 1 | R.A.Jeyasudarssan & Co, Theni. | ரூ:59,608.00 |
| 2 | Cool Tech Airconditioner, Theni | ரூ:64,690.00 |
| 3 | Bombay Traders, Theni. | ரூ:71,500.00 |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள M/s.R.A.Jeyasudarssan & Co, Theni நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2906 /2018/இ2)

**தீர்மான எண். 726 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:1,00,000/- லட்சம் (ரூபாய்: ஒரு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு இரண்டு எண்ணம் பிரிண்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 25-09-2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) (பிரண்டர் ஒன்றுக்கு) | மொத்த தொகை (ரூபாய்.) (இரண்டு பிரண்டர்களுக்கு) |
|---|---|---|---|
| 1 | Jey Systems, Theni | ரூ:20,850.00 | ரூ:41,700.00 |
| 2 | Bee Systems, Theni | ரூ:20,500.00 | ரூ:41,000.00 |
| 3 | S Brain Systems, Theni | ரூ:21,300.00 | ரூ:42,600.00 |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள M/s. Bee Systems, Theni நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2874 /2018/இ1)

**தீர்மான எண். 727 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 25:

தேனி – அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டியில் அமைந்துள்ள நகராட்சி குப்பை கிடங்கில் ரூ:9.00 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அலுவலக கட்டடம் மற்றும் தரைமட்ட தொட்டி அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: 154 நாள்: 31-03-2017 நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.K.A.R. Constructions,தேனி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணி மேற்கொள்ளும் நிலையில் பணி மேற்கொள்ளும் இடத்தின் மண் தன்னைக்கு ஏற்ப பவுண்டேசன் கூடுதலாக தோண்டப்பட்டு, அதற்கு ஏற்றவாறு பேஸ்மன்ட் மற்றும் Column கான்கீரிட் அமைக்கப்பட வேண்டிய அவசியம் கருதியும், மேலும் பூர்வாங்க மதிப்பீட்டில் 4 அடி உயரத்திற்கு கொடுக்கப்பட்ட Wall Tiles பணி மேற்கொள்ளும் போது அவசியம் கருதி 7 அடி உயரத்திற்கு அமைக்க வேண்டியது வேண்டியதன் அவசியம் கருதி கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலினம் ரூ:80,00/- அதற்கான திருத்திய மதிப்பீடு ரூ:9,80,000/- (ரூபாய்: ஒன்பது லட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) | திருத்திய மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | தேனி- அல்லிநகரம் நகராட்சி உப்பார்பட்டி குப்பை கிடங்கில் நிர்வாக அலுவலக கட்டடம் மற்றும் தரைமட்ட தொட்டி அமைத்தல் | 9.00 | ரூ:9,80,000.00 |

**அலுவலக குறிப்பு :-**

அ) பணியினை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு கூடுதல் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1729/2017/இ1)

**தீர்மான எண். 728 அ. ஆ இ அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி